# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.60/2023 நாள்.03.07.2025

PW1- திரு. தண்டபாணி த /பெ. திரு. சின்னப்பகவுண்டர்

**1, 3 , 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

2ஆம் பிரதிவாதி முருகானந்தத்திற்கும், எனக்கும் நல்ல நட்பு என்றால் இல்லை. பேச்சுவார்த்தை உண்டு. 5ஆம் பிரதிவாதிக்கு கிரய பத்திரம் எழுதி கொடுத்த தேதி 08.01.2018 என்றால் தெரியவில்லை. கிரய பத்திரம் எழுதி கொடுத்த அன்றே முருகானந்தம் என்னிடம் அதை காண்பித்து விபரம் சொல்லிவிட்டார் என்றால் இல்லை. கிரய பத்திரம் எழுதிய 08.01.2018 அன்றைக்கே வழக்கு விபரங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றும் இந்த வழக்கு காலாவதியாக தாக்கல் செய்யபட்டது என்றும் சொன்னால் சரியல்ல. பிராதில் 6 வது பத்தியில் பொது அதிகாரம் ஏற்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் சொத்தை முழுமையாவோ, பகுதியாகவோ சட்டத்திற்கு உட்பட்டு அதிகாரம் வாதி கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். நான் அதிகாரம் கொடுத்ததால் தான் 5ஆம் பிரதிவாதி விற்றிருக்கிறார் என்றும் நானும், அந்த விற்பனை ஆவணத்தில் தரப்பினர் என்றும் இந்த நிலையில் ஆவணத்தை செல்லா தன்மையுடையது வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றும் நீக்கரவு செய்வதற்குதான் நான் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்று சொன்னால் இல்லை. மேற்கண்ட சங்கதிகள் அடிப்படையில் நீதிமன்ற கட்டண சட்டபிரிவு 25Dயின் கீழாக கட்டணம் செலுத்தியது தவறு என்றும் குறை ஆவணத்தில் கணக்கீட்டு கட்டவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பொது அதிகாரம் எழுதி கொடுத்தஅன்றே மூல பத்திரத்தை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டோம் என்றால் ஆமாம். எனக்கு நாலுபேரும் என்னிடம் முழு கிரய த்தொகையும் கொடுத்தது அடிப்படையில் நான்குபேருக்கும் நான் பொது அதிகாரம் எழுதி கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

**5 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு பூர்விகம் என்ன ஊர் என்ன என்றால் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம். நான் கடந்த 10 வருடங்களாக நான் நிலம் வாங்கி தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். தஞ்சாவூருக்கு வட்டி தொழில் செய்வதற்காக வந்தேன் என்றால் பிள்ளைகளை படிக்க வைப்பதற்காகவும், விவசாய தொழில் செய்வதற்காகவும் வந்தேன். நான் வாங்குவதற்கு முன்பாக தாவா சொத்து பிலிப்அருள்ராஜ் என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்றால் ஆமாம். நான் கிரயத்திற்கு வாங்குவதற்கு முன்பாக மேற்படி பிலிப்அருள்ராஜ்க்கு நான் தொகை கடனாக கொடுத்திருந்தேன் என்றால் இல்லை. பிலிப்அருள்ராஜ் வாங்கிய கடனை திருப்பி கொடுக்கவில்லை என்பதற்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி காவல்நிலையத்தி புகார் கொடுத்திருந்தேன் என்றால் தாவா சொத்து பற்றி அல்லாமல் வேறு கடன் வாங்கினார் அதை திருப்பி தராததால் புகார் கொடுத்தேன். கடன் கொடுத்து வாங்கும் தொழில் செய்ய நான் அரசு அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை நான்

அந்த தொழில் செய்யவில்லை. நான் பிலிப்அருள்ராஜ்க்கு பணம் கொடுக்கும்போதே அவருடைய சொத்தை அபகரிக்கும் கடன் கொடுத்து தாவா சொத்தை எழுதி வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளில் 2ஆம் பிரதிவாதி முருகானந்தம் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் இல்லை. இந்த சொத்து விற்பனை தொடர்பாக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன் என்றால் ஏஜெண்ட் ஏமாற்றிவிட்டார் என்று கொடுத்துள்ளேன். அந்த புகார்தான் பி.வா.சா.ஆ.1 என்றால் ஆமாம். அந்த புகார் மனுவில் சொத்துக்கான விலை 81 லட்சம் பேசி நாற்பது லட்சம் முன்பணமாக பெற்றுகொண்டு மீதி தொகையை கிரயம் முடித்து தருவதாக சொன்னார்கள் என்று நான் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். தஞ்சாவூர் மருத்துவகல்லூரி காவல்நிலையத்தார் நடவடிக்கை எடுக்காததால் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தனி புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த தனிபுகாரில் நான், 2ஆம் பிரதிவாதி முருகானந்தம், மற்றும் இரண்டுநபர்கள் சாட்சி சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். முருகானந்தம் அந்த வழக்கில் எனக்கு சாதகமாக சாட்சி சொல்லியுள்ளார் என்றால் உண்மையைதான் சொல்லியுள்ளார். தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது நான் குற்றவியல் நடுவர் நீதிமனற்த்தில் தாக்கல் செய்த புகார் மனு நகல் என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ.2** ஆகும். அதில் கிரயம் எவ்வளவு பேசபட்டது எவ்வளவு முன்பணம் பெறபட்டது குறிப்பாக இல்லை என்று சொன்னால் இல்லை. தனிபுகாரில் கிரயத்தொகை பேசபட்டது அதில் 50 சதவீதம் பெற்றுகொண்டேன், 50 சதவீதம் இன்னும் கொடுக்கவில்லை என்று வாசகம் உள்ளது என்று சொன்னால் ஆமாம். பிராதில் மொத்த கிரயத்தொகை எவ்வளவு பேசப்பட்டது எவ்வளவு முன்பணம் கொடுத்தார்கள் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று வாசகம் உள்ளதா என்றால் நான் ரத்து பண்ணி தரச்சொல்லி தான் கேட்டுள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது 16.3.2022 கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் ஆமாம். **பி.வா.சா.ஆ.3** ஆகும். பி.வா.சா.ஆ.3 அந்த அறிவிப்பில் மொத்த கிரயத்தொகை எவ்வளவு பேசப்பட்டது எவ்வளவு முன்பணம் கொடுத்தார்கள் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று வாசகம் உள்ளதா என்றால் சொல்லியுள்ளேன். நான் அந்த மாதிரி என்ன விபரம் சொல்லவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றும்சொன்னால் சரியல்ல. 1, 3, 4 பிரதிவாதிகள் எனக்கு தனி அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் ஆமாம். வழக்கறிஞர் பார்த்தசாரதி என்பவர் மூலம் பதில் அறிவிப்பு 1, 3, 4 பிரதிவாதிகள் கொடுத்தார்கள் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் பதில் என்றால் ஆமாம். அது **பி.வா. சா.ஆ.4** ஆகும். 5ஆம் பிரதிவாதியும் அதேபோல் ஒரு பதில் கொடுத்துள்ளார் என்று சொன்னால் ஆமாம். அதுதான் தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது என்றால் ஆமாம். அது **பி.வா,சா.ஆ.5** ஆகும். அதில் மொத்த கிரயம் பேசப்பட்டது 80 லட்சம் அல்ல என்றும் 40 லட்சம் தான் என்றும் அந்த 40 லட்சத்தை பெற்று கொண்டு நான் கிரய பத்திரத்திற்கு பதிலாக பவர் பத்திரம் கொடுத்தேன் என்று சொல்லபட்டுள்ளது என்றால் சரியல்ல. பதில் வந்த பிறகு வழக்கறிஞரை போய் பார்த்தபோது அவர் அறிவிப்பு மற்றும் பதில் வந்துள்ள விபரங்களை என்னிடம் சொன்னார் என்றால் ஆமாம். அப்படி அவர் சொல்லும் போது 40 லட்சம் முழுமையாக கிரயம் பேசபட்டு பெற்று கொண்டதாக வந்துள்ளது குறித்து

வழக்கறிஞர் சொன்னாரா என்றால் சொன்னார். 40 லட்சம் பெற்றுகொண்டதாக சொன்ன விபரங்களையும் 80 லட்சம் விலை இல்லை என்ற விபரங்களையும் என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் பத்திர பதிவின் போது 22 லட்சம் வரைவேல9லை என்று சொல்லியுள்ளார் அதுவாது கிடைக்கும் என்று பார்த்தேன் அதுவும் கிடைக்காததால் வழக்கு போட்டுள்ளேன். அந்த கிரய பத்திரத்தில் ஒவ்வொரு நபருக்கும் 5 லட்சம் வரைவோலையாக கொடுத்ததாக பத்திரத்தில் உள்ளது என்றும் அது விபரம் தெரியுமா என்றால் வழக்கு போடும்போதுதான் தெரியும். வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே தனி நபர் வழக்கு குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். அந்த தனி புகாரில் 2ஆம் பிரதிவாதி முருகானந்தம் முதல் சாட்சி என்றால் ஆமாம். எனக்காக சாட்சியாக முருகானந்தம் 2ஆம் பிரதிவாதி வந்தபோதிலும் நாலது தேதி வரை 5லட்சம் வரைவோலையை கொடுக்கவில்லை என்றும் சொன்னால் வாங்கியவரிடமே கொடுத்ததாக சொன்னார். குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியாக கிரயம் பேசபட்ட தொகையில் 50 சதவீதம் முன்பணம் பெற்று கொண்டதாக சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றால் இல்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் என் தரப்பில் விசாரிக்கபட்ட நான்கு சாட்சிகளும் கிரயத்தொகையில் 50 சதவீதத்தை பெற்று கொண்டதாக சொல்லியுள்ளோம் என்றால் சாட்சி எதுவும் சொல்லவில்லை. 2018 லிருந்து தனிபுகார்கொடுப்பதற்கு முன்பாக வும் காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பாகவும் எத்தனை முறை 1 முதல் 5பிரதிவாதிகளிடம் தொகையை நான் கேட்டேன் என்றால் 2022இல்தான் எனக்கு தெரியும். 5ஆம் பிரதிவாதி அவரிடம் 1 முதல் 4 பிரதிவாதிகள் சொத்து விற்பனை தொடர்பாக வாங்குவதற்கு முன்பாக எனக்கு போனில் தொடர்பு கொண்டு பவர் கொடுத்தது உண்மையா என் பெயரில் ஏற்பட்ட ஆவணங்கள் உண்மையா என்று விசாரித்தார் என்றால் இல்லை. என்னுடைய பவர் ஏஜென்ட் நான்குபேரும் 5ஆம் பிரதிவாதியிடம் கிரயம் பேசியவுடன் அவர் என்னிடம் போன் மூலம் பேசி தகவல் கேட்டார் என்றும் நான்தான் உரிமையாளர் என்றம் பவர் கொடுத்துள்ளேன் என்றம் அவரிடம் சொல்லிவிட்டு தற்போது வழக்குக்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2018 லிலேயே கிரயம் பேசிய விபரமும், பத்திரம் பதிவான விபரமும் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 5ஆம் பிரதிவாதி என்னிடம் கேட்டு விசாரித்தபிறகு 1முதல் 4பிரதிவாதிகளிடம் நான் கொடுத்த அசல் ஆவணங்களை வாங்கி பார்த்து நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. 5ஆம் பிரதிவாதியிடம் போய் பணம் கேட்டேன் அவர் என்னை மிரட்டினார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 5ஆம் பிரதிவாதி நல்லஎண்ணத்தின்பால் கிரயம் வாங்கிய நபர் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கபட்டது என்றும், தாவாவில் நான் கோரியுள்ள பரிகாரம் சரியல்ல என்றும், ஆவணம் நிலைநிற்ககூடியதல்ல நீக்கரவு செய்யபடவேண்டிய ஒன்று என்று பரிகாரம் கோரியிருக்கவேண்டும் என்ற சொன்னால் சரியல்ல. என் சார்பாக 1 முதல் 4 பிரதிவாதிகள் வரைவோலை மூலம் 5ஆம் பிரதிவாதி தொகையை செலுத்திவிட்டார் என்று சொன்னால் தெரியாது. 1 முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து நான் பொது அதிகார பத்திரம் கொடுக்கும்போதே கிரயத்தொகை 40 லட்சத்தை முழுமையாக பெற்றுகொண்டு கிரயத்திற்கு பதிலாக பொது அதிகாரம் கொடுத்தேன் என்றால்ச ரியல்ல. உண்மையான காரணங்களை

மறைத்து விட்டு பொய்யான விஷயங்களை சொல்லி இந்த தாவாவை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பிராதில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றும் பிராது தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.